விலை ரூபா 1-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 30 மாசி 13 ரஜப் பிறை 6 இதழ் 15

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-2-1988

## யாழ். குடாநாட்டில் ஊரடங்கு மேலும் தளர்வு

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் நேற்று முதல் ஊரடங்குச் சட்டம் இரவு ஒன்பது மணியிலிருந்து மறுநாள் அதிகாலை ஐந்துமணி வரை மாத்திரம் அமுல் படுத்தப்படுகிறது.

இதன்படி இன்றுயாழ். குடாநாட்டில் ஊரடங்கு உத்தரவு இரவு ஒன்பது மணிக்கு அமுல் படுத்தப்பட்டு மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கு நீக்கப்படும்.

யாழ். நகர கொமாண்டிங் அலுவலகம் நேற்று இவ்வாறு அறிவித்தது.

இதுவரை காலமும் யாழ். குடாநாட்டில் இரவு ஏழு மணிக்கு அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவு மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கு நீக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

# அதிகார பரவலாக்கல் அம்சம் அரசியலமைப்பில் வேண்டும்

## கூட்டணி வலியுறுத்து

(நமது அரசியல் நிருபர்)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரப் பரவலாக்கம் சம்மந்தமான விடயங்களை இலங்கையின் அரசியல் அமைப்பில் ஒரு முக்கிய பகுதியாக சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்தியிருக்கிறது.**

இந்த விடயங்கள் அரசியல் அமைப்பில் ஒரு முக்கிய பகுதியாக உருவாக்கப்படாவிட்டால், சாதாரணத் திருத்தங்கள் மூலம் அந்த அதிகாரங்கள் வலுவற்ற நிலைக்கு உட்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எனினும், அதிகாரப் பரவல்கள் சம்ப ்தமான விடயங்களை அரசியலமைப்பில் ஒரு முக்கிய பகுதியாக உருவாக்க வேண்டுமானல் ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாகவே அதைச் செய்யமுடியும் என்று இலங்கைஅரசாங்கம் ெரிவித்திருக்கிறது.

இதேவேளை, மாகாணசபை தேர்தலுக்குப்பின் மக்களால் தெரிவுசெய்ய-பட்ட தமிழ் பிரதிநிதிகளுடன்பேச்சுவார்த்

[8ம் பக்கம் பார்க்க]

## அடகுவைத்து தொலைந்த நகைகளுக்கு நஷ்டஈடு!

[யாழ்ப்பாணம்]

சங்கானை மக்கள் வங்கியில் 1983ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பதின்ளுன்காம் திகதிக்கும் அதே ஆண்டு நவம்பர் மாதம் 'ஏழாம்' திகதிக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் அடகு வைத்று தொலைந்த நகைக்கான நஷ்டஈடு வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி நஷ்டஈட்டை இதுவரை பெற்றுககொள்ளத் தவறியவர்கள், உடனடியாக மக்கள் வங்கி கன்ளுதிட்டிக்கிளை முகாமையாளருடன்தொடர்பு கொண்டு நகைக்கான நஷ்டஈட்டைப் பெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## தீவிரவாதிகள் தாக்குதலில் மூவர் பலி; நால்வர் காயம்

(கொழும்பு)

தென்பகுதியில் அதிகரித்து வரும் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் கடந்த மூன்று தினங்களில் மூவர் கொல்லப்பட்டும், நால்வர் படுகாயமடைந்துமுள்ளனர்.

பொலிஸாருக்கு தீவிரவாதிகள் பற்றி தகவல் கொடுத்தாரென்று வியாங்கொட புடவை ஆலை தொழிலாளர் சங்கத் தலைவரும், ஐ தே க உறுப்பினருமான திரு. ஏ. சுனில் என்பவரும்,மற்ருெரு சம்பவத்தில் கே. ஜெயவீர என்ற விவசாயியும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை 'வாதுவையில்' குண்டு வெடித்ததில் ஒருவர் பலியானுர்


## சமூக சேவைகள் அமைச்சர் காலமானுர்

(கொழும்பு)

சமூகசேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணுரத்ன நேற்றுக்காலை மாரடைப்பினுல் காலமானுர்.

வீட்டிலிருந்து அமைச்சரவைக் கூட்டத்துக்கு புறப்பட ஆயத்தமானபோது மாரடைப்பு ஏற்படவே, இவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு சிகிச்சைக்குப் பின்னர் சிறிதுநேரத்தில் மரணமானுர்.

அமைச்சர் அசோகா கருணுரத்ன [வயது 72] 1916-ம் ஆண்டு ரம்புக்கனயில் ஜனவரி 28ம் திகதி பிறந்தார். 47-ம் ஆண்டு ரம்புக்கன நகரசபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். 1958-ம் ஆண்டு3வது பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார். 1960ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசில் பிரதி நீதியமைச்சராகப் பதவிவகித்தார். 1963ம்ஆண்டு



(8-ம் பக்கம் பார்க்க)

## 155 போராளிகள் சரணடைந்துள்ளனர்

### இந்திய பாராளுமன்றத்தில் தகவல்

(புதுடில்லி)

இலங்கையில் இதுவரை 155 போராளிகள் சரணடைந்திருக்கிருர்கள்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. கே. சி. பந்த் நேற்று இந்திய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைதிப் படையின் நடவடிக்கையின் போது 3279 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் இதில் பெரும்பான்மையானேர் விசாரணைக்குப் பின் விடுவிக்கப்பட்டனரென்றும் அவர் தெரிவித்தார்.

## 12,000 ஆசிரியர் நியமனம் ஒத்திப்போடப்பட்டது

[கொழும்பு]

நாடுமுழுவதும் புதிதாக இவ்வாரம் நியமனம் பெறவிருந்த 12,000 ஆசிரியர்களின் நியமனம் மாகாணசபைத்தேர்தல் நடவடிக்கைகளையடுத்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமிக்கப்படவுள்ளவர்களில் 2 000 ஆசிரியர்கள் வடக்கு - கிழக்கில் நியமனம் பெறவுள்ளனர். 12,000 ஆசிரியர்களில் 7,000 பேர் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களாவர்.

மாகாண சபை தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்படவிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளையடுத்தே இந்நியமனங்கள் ஒத்திப்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சை: விண்ணப்ப திகதி மார்ச் 31வரை நீடிப்பு

[சுண்டுக்குளி]

ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி எதிர்வரும் மார்ச் மாதம் 31-ம் திகதி என்று கல்வித் திணைக்களத்தினுல் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்பரீசைக்கான முடிவு திகதி மார்ச் மாதம் 15-ம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மட்டு அன்னையர் முன்னணி சாகும்வரை உண்ணுவிரதம் இன்று 5-ம் நாள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினர் மேற்கொள்ளும் சாகும்வரை உண்ணுவிரதப் போராட்டம் இன்று ஐந்தாம் நாளாகும்.

பல கோரிக்கைகளை முன்வைத்து இப் போராட்டத்தில் முதற்கட்டமாக திருமதி எம். எஸ். அன்னம்மா டேவிட் (வயது 58), திருமதி எம்.எஸ். நேசம்மா வடிவேலு (வயது 50) இறங்கியுள்ளனர். (சி)

## மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு நடவடிக்கைக்கு 14 கோடி ரூபா தேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு 14 கோடி ரூபா தேவை என்று மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எஸ். செல்வரட்ணம் புனர்வாழ்வு அமைச்சைக் கோரியுள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் தொழில் ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திரு. செல்வரட்ணம் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகத்தையும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளார். [சி]

## ராஜினுமா செய்யப்போவதாக இந்திய உப ஜனுதிபதி எச்சரிக்கை

[புதுடில்லி]

இந்திய உபஜனுதிபதி டாக்டர் சங்கர்தயாள்சர்மா தமது பதவியிலிருந்து ராஜினுமாச் செய்யப்போவதாகராஜ்யசபாவில் நேற்றுமுன்தினம் எச்சரிக்கை விடுத்தார்.

இந்திய ராஜ்யசபா மேல் சபைக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இச்சபையின் தலைவரான உபஜனுதிபதி சங்கர் தயாள் சர்மா கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## கார்த்தாண்குடியில் ஒருவர் பலி!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் காத்தான்குடியில் இந்தியஅமைதிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் முஸ்லிம் நபர் ஒரு

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய ஆங்கில தட்டெழுத்து இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு Sabas Studio, No;51, Stanley Road, Jaffna (சி-2522)

5 வேம்பு மரங்கள் சுற்றளவு 4 — 5 அடி விற்பனைக்குண்டு. தொடர்பு: க. செல்வராசா, தும்பளை வீதி, (சங்கக்கடை 2-வது கிளைக்கு அருகாமை பருத்தித்துறை சி-2498

Kandy Uplands Farm Ltd ஒருமாத [Lohmann] பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 2000 விற்பனைக்குண்டு. உடனே தொடர்புகொள்க! விலை 18-50 No 9, சூராவத்தை ரோட் (கந்தையாலேன்) சுன்ஞகம். (ஸ்டேசனுக்கு அருகாமையில்) சி-2440

பாடசாலை மாணவருக்கான பாடப்பயிற்சி நூல்கள் அப்பியாசாக் கொப்பிகள் C R கொப்பிகள் சகலவிதமான விலைகளிலுமான முத்திரைகள் டயறிகள் ஸ்ரேசனறிச் சாமான்கள் ஆகியன பெரும் திரளாக விற்பனைக்குண்டு. வியாபாரிகட்கு விசேட கழிவு மேலும் விபரங்கட்கு மக்மிலன் புத்தகசாலை No 3 பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். சி-2491

Uplands Farm ltd, Kandy, கோழிக்குஞ்சு விநியோகம் (Lohmann) சேவல் குஞ்சுகள் [3-3-88) வியாழக்கிழமை விநியோககிக்கப்படும். விலை ரூ 4-00, முன் கூட்டியே பதிவு செய்க. இல 9 சூராவத்தை ரோட் (கந்தையா லேன்) சுன்ஞகம். (ஸ்டேசனுக்கு அண்மையில்] (சி-2530)

முதலாவது
பிறந்தநாள்
வாழ்த்து



செல்வி கீர்த்தஞ

உடுவில் கிழக்கை சேர்ந்த த. சேயானந்தம் வரதலெட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வி கீர்த்தஞதனது முதலாவது பிறந்ததினத்தை (25-2-88 இன்று கொண்டாடுகிருர். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமா, அன்பு பெரியப்பா, பெரியம்மா மற்றும் உற்ருர் உறவினர்கள் சகல செல்வங்களையும் துர்க்கையம்மனின் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிருர்கள். உடுவில் கிழக்கு சுன்ஞகம். [சி 2526]

## விற்பனைக்கு

பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 26ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி-2436)

## தேவை

பழைய பித்தளை, அலுமினியம் உயர் விலைக்குதேவை பிள்ளையார் மெட்டல் வேக்ஸ், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (சி 2527)

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட Chinese Restaurant இல் வேலை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த Cook, Waiter தேவை தொடர்பு கொள்ளவும் 45, இராசாவின் தோட்டம் ரோட், [றயில்வே கடவைக்கருகாமையில்], யாழ்ப்பாணம் (சி-2534)

எமது நிறுவனத்திற்கு பியோன் தேவை தகுதியானவர்கள் 26-02-88 காலை 10 மணிக்கு நேரில் வரவம் அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், 166/1, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். [A S சங்கரட்பிள்ளை கட்டிடம் 1ம் மாடி] [எ-343]

குறித்த தவணையில் ரேனியோ பிரதிகள், தட்டச்சு வேலைகள் சிறந்த முறையில் செய்து தரப்படும். விபரங்களுக்கு: அஸ்ரன் இன்ஸ்ரிரியூட், 166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [A S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ம் மாடி] (ஏ-2562)

தமிழ் ரைப்பிங் வேலைகளில் போதிய ஆற்றலும் மூன்று ஆண்டுகால அனுபவமுள்ள 'ரைப்பிஸ்ட்' உடன் தேவை கல்வித்தகைமை, அனுபவச் சான்றுகளுடன் 28 02-1988 ஞாயிறு காலை ஒன்பது [9-00] மணிக்கு நேரில் வரவும் கிளின்-கட், 239—மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி- 2453)

## சேவை

தலைமுடி உதிராது கருமை நிறத்துடன் நல்வளர்ச்சியுற சியாக்காய், தேசிக்காய்கோது நறுமணத்துக்கு வெட்டிவேர் அரைப்பதற்கு ஈஸ்வரி மில்ஸ். நல்லூர். (கல்வியங்காடு சந்தைக்கு எதிரில்). சி-2419

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும் மற்றும் வாங்கவும் விற்கவும் Fudo Ent.rprises, 39/17, Power House Road, 3-rd Lane, Jaffna. சி-2501

## WANTED

Maths / Chemistry Graduate 35 yrs, vith Teaching / Stores Managment [Pharmaceutical] Experience looking for Employment apply Advt/No C 2529, C/o Eelanadu, Jatfna (C-2529)

## வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான இடத்தில் சந்தைக் கருகாமையில் தற்பொழுது இயங்கிக்கொண்டிருக்கும் பேக்கரி ஒன்று வாடகைக்குக் கொடுக்கப்படும் உடன் தொடர்பு கொள்ளவும். வ. துரைராசா, 'அருள் ஒளி வாசா', உயரப்புலம், ஆனைக்கோட்டை. [சி-2513]

## வகுப்புக்கள்

108 Brown Road, Jaffna A/L 88 இரசாயனம் மீட்டல் (திங், செவ், புதன், வியா, வெள்ளி 5-15 p-m) பௌதிக இராசாயனம் ஆரம்பம்: (25 - 02 - 88] வியாழன் 5 15 p-m ஆசிரியர் சத்தீஸ் [செவ், வியா 5-15 p-m] சி-2464

108 Brown Road, Jaffna A/L 89 அசேதன இரசாயனம் ஆரம்பம் (25 - 02 - 88) வியாழன் 4-00 p-m ] ஆசிரியர் சததீஸ் (செவ், வியா, வெள்ளி 4-pm) சி-2463

## கல்வி

பாலராசிரியர் பயிற்சிநெறி-சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகிறது. க பொ த. [சா/த] சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம் நேரில் வந்து பயில முடியாதவர்கள் தபால் வழியும் பயிலலாம். இன்னும் சில மாணவியர்க்கு இடமுண்டு. பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். சி-2470

"பெருந்தோட்டத்துறை பாடசாலைகளுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்த்தல் — 1988" போட்டிப் பரீட்சைக்குரிய பாடங்களான மூன்று பாடங்களும் 35 வருட அனுபமுள்ள ஆசிரியரினல் கற்பிக்கப்படும். கிழமை நாட்களில் வரமுடியாதோருக்கு சனி, ஞாயிறு தினங்களிலும் வகுப்புகள் உண்டு அன்பு கல்வி நிறுவனம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் சி-2471

## தவறிவிட்டது

402811528 V சி. பரமநாதன், "பூமகள் வாசா" பொற்பதி வீதி, கொக்குவில், என்பவருடைய அடையாள அட்டை 19-2-1988 அன்று காலை 7-30 மணியளவில் நல்லூர் கந்தசாமி கோவில் உள் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் உள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி 2520)

சின்னத்துரை தனபாலசிங்கம் திருவையாறு, கிளிநொச்சி என்னும் முகவரி உடைய தேசிய அடையாள அட்டை 23-2-88 கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் "ஞானகிரி ஹோட்டல்", 372, பீச் ரோட், நாவாந்துறை, என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (சி2532)

## அறிவித்தல்

கூலி வேலைக்குக்

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தால் நடத்தப்படும் அரிசியாலையில் கூலி வேலை செய்வதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்கான கேள்விப்பத்திரங்களை வேலை நாட்களில் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 09-03-88

பொதுமுகாமையாளர்.
சுன்ஞகம் பல. நோ. கூ. சங்கம், சுன்ஞகம். (எ-349)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
ராஜலட்சுமி
தில்லைநாதன்

மலர்வு:- 7- 3- 1907
உதிர்வு:- 25- 2- 1984

நான்காண்டு ஓடிமறைந்துவிட்ட போதிலும் உங்கள் நினைவு எம் உள்ளங்களை விட்டகலவில்லை உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ளேம்

அன்பு மக்கள், (காலஞ்சென்ற ராஜநாதன்), கனகநாதன், விஸ்வநாதன், தில்லைநாயகி, மருமக்கள், பேரன், பேத்திமார், உற்ருர், உறவினர்.

பத்மாசனம்.
மாரியம்மன் ஒழுங்கை,
திருநெல்வேலி.
(சி- 2483)

## ஓராண்டு நினைவஞ்சலி



ராஜாராம்
ராதக்கிருஷ்ணன்
(குமார்]
[இந்திரா ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்)

தோற்றம்:- 11-1-1969
மறைவு:- 8- 3- 1987
திதி:- 25- 2- 1988

எங்களை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென மறைந்த எங்கள் அன்புச் செல்வமே! பெற்ருரை வழி அனுப்பிவிட்டு திரும்பிவரு முன் ஷெல்லுக்குப் பலியாகி விட்டாயே செல்வமே எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் திகழ்வாய் என்று நினைத்தோமே. ஆனல் நீ உழைத்து நான்கு வருடங்களில் உன்கடமை முடிந்தது என சென்று விட்டாயே செல்வமே ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்,

அப்பா, அம்மா, சகோதரிகள், சகோதரர்கள், மைத்துனர்கள், பாட்டி, சின்னையாமார், சின்னம்மாமார், பெரியய்யாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார்,

270. கே.கே. எஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.
(சி- 2353)

## ஓய்வு பெற்ருர்

[பண்டத்தரிப்பு]

மாதகல் மேற்கு அரசினர் த. க. பாடசாலை அதிபர் திரு நா. பொன்னையா பதவியிலிருந்துஓய்வுபெற்றுள்ளார். இவரின் இடத்திற்கு புதிய அதிபராக திரு. வி. சேஞதிராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

## முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்
பொன்னையா சிவகுரு
(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)


மலர்வு: 5-2-1921
உதிர்வு: 9-3-1987
திதி: 25-2-1988-நவமி

குடும்பத்தின்ஒளிவிளக்காய் இருந்து எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும்துதிக்கின்ருேம். உங்கள் பிரிவால் வாடும்

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"ஞானவாசா"
தேவாலய வீதி,
சங்கானை. (சி-2538)

## 6-வது ஆண்டு நினைவஞ்சலி



கந்தையா
மதியாபரணம்
(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
மண்டைதீவு)

தோற்றம்:- 20-05-1951
மறைவு:- 25- 02- 1982

ஆண்டுகள் ஆறு ஓடி
மறைந்தாலும்
ஆண்டவன் திருவடியை
நீ சென்றடைந்தாலும்
நிச்சயமாய் எங்கள்
மனங்களிலே
என்றும் பத்திரமாய்
நிலைத்திருப்பாய்!

உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும், அன்பு ஐயா, அம்மா, சகோதரி, சகோதரர்கள், மச்சான், மாமன்மார்கள், உற்ருர், உறவினர்கள்

இல: 28,
ஆசீர்வாதப்பர் வீதி,
கச்சேரி நல்லூர் ரோட்,
யாழ்ப்பாணம்.
(சி-2456)

# ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசு!

## கிளர்ச்சிக்குழு அறிவிப்பு!

இஸ்லாமாபாத் பெப் 24,

**ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்கும் திட்டமொன்றை பாகிஸ்தானில் உள்ள ஏழு ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து அறிவித்துள்ளன. இந்த அறிவிப்பில் சோவியத்துருப்புகள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற முன்னர் இடைக்கால அரசு உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.**

பாகிஸ்தானில் உள்ள ஏழு ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து இப் புதிய இடைக்கால அரசு அமைக்கும் திட்டத்தை அறிவித்துள்ளன. பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ்தான் அகதிகளின் பிரதி நிதிகளுக்கும் இடைக்கால அரசில் இடம் ஒதுக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சித் தலைவர்களுக்கு 14 இடங்களும், தற்போதைய ஆப்கானிஸ்தான் அதிபரான நஜிபுல்லா தலைமையிலான உறுப்பினர்களுக்கு 7 இடங்களும், ஆப்கானிஸ்தான் அகதிகளின் பிரதிநிதிகளுக்கு 7 ஆசனங்களும், 28 பேர் கொண்ட ஆப்கானிஸ்தான் அமைச்சரவையின் இடைக்கால அரசாங்கத்தில் ஒதுக்கப்படவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத்துருப்புக்கள் வாபஸ் பெறப்படுமுன்னர் இந்த இடைக்கால அரசு அமைக்கப்படுவதுடன், பாகிஸ்தானில் உள்ள ஆப்கான் அகதிகள் பாதுகாப்பாக தாயகம் திரும்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் பிரச்னை குறித்து ஜெனிவா ஒப்பந்தத்தின் அடிப்படையில் போர் நிறுத்தத்துக்கும் தாம் ஒத்துழைக்க கிளர்ச்சிக்குழுக்கள் இந்த இடைக்கால அரசுயோசனையில் குறிப்பிட்டுள்ளன.

## சோவியத்தின் ஆர்மேனிய குடியரசில் ஆர்ப்பாட்டங்கள்!

மாஸ்கோ, செப் 24,

சோவியத்யூனியனைச்சேர்ந்த ஆர்மேனியன்குடியரசில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்கள், பஷ்கரிப்புகளில் ஈடுபட்டுள்ளனர்.

சோவியத்யூனியனின் தென் பிரதேசத்திலுள்ள ஒரு குடியரசாக ஆர்மேனியா விளங்குகின்றது. இங்கு கிறிஸ்தவ மதத்தவர்களே பூர்வீகக் குடிமக்களாக இருந்து வருகின்றனர்.

ஆர்மேனியாவின் அயல் குடியரசான அசுர்பஜானில்உள்ள இடமொன்றின் உரிமை தொடர்பாக தற்போது ஆர்மேனியாவில் கலகங்கள் மூண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யப்புரட்சிக்கு முன்னர் ஆர்மேனிய வாசிகளுக்குச் சொந்தமாகவிருந்த அந்த இடம்தற்போது முஸ்லிம்களைப் பெருமளவாகக் கொண்ட அசுர்ஜானுக்குச் சொந்தமாக இருப்பதற்கே எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழப்பநிலையைக்கையாளவென இநகிரேம்ளின் அதிகாரிகள் ஆர்மேனியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள், கல்லூரிகள் பகிஷ்கரிக்கப்பட்டும் வீதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தப்பட்டும் ஆர்மேனியாவில் கலகங்கள் இடம்பெற்றுவருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. [கி]

## பாலஸ்தீனியர்களைத் தாக்கிய இஸ்ரேலிய பொலிஸார்மீது ஒழுங்கு நடவடிக்கை

ரெல்அவிவ், பெப்24,

இஸ்ரேலின் தலைநகரான ரெல் அவிவில் பாலஸ்தீனர்களைத் தாக்கிய இஸ்ரேலிய பொலிஸார் மூவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை அடுத்து ஒரு பொலிஸ்அதிகாரி வேலை நீக்கம்செய்யப்பட்டுள்ளார் வேறுஇரு பொலிஸ்காரர்கள் தற்காலிகவேலைநீக்கத்துக்குள்ளாகினர்.

ரெல்அவிவ்வில்உள்ள விடுதியொன்றில்தங்கியிருந்த எட்டு பாலஸ்தீனியர்களைத் தாக்கியதாகவே அப்பொலிஸார் மீது குற்றம்சாட்டப்பட்டது.

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களில், இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகள் குறித்து இஸ்ரேலியஇரராணுவ தளபதியால் புதிய உத்தரவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தஉத்தரவு பாலஸ்தீனியர் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொள்வதை தடுப்பதாக அமைகின்றது.

பாலஸ்தீன கலகக்காரர்கள் மீது உடலின் முக்கியமான உறுப்புக்களில்தாக்குதல் நடத்துவதை நிறுத்தும்படி அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டதுடன்; கூடியளவு தாக்குதல்களை முரட்டுத்தனமாக மேற்கொள்ளுவதைத் தவிர்க்கும் படியும்கேட்கப்பட்டுள்ளது. [கி]


### விசேட அறிவித்தல்

**இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள் கல்வியாண்டு - 1988**

**விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது**

B. A., B Com. ஆகிய பாடநெறிகளுக்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 5-ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

விண்ணப்பப் படிவத்தினையும், விபரத் திரட்டினையும் பிரதான காரியாலயத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

**2-ம் பிரிவிற்கான பயிற்சி வகுப்புக்கள் 05-03-88ல் ஆரம்பமாகின்றன.**

★ பேராதனைப் பல்கலைக்கழகம், சிறீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முறையே B. A., B. Com. பதிவிற்கான விண்ணப்பப் படிவங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். பதிவுகள் அனைத்தும் நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

1987 ஏப்ரலில் நடைபெற்ற G.A.Q. பரீட்சையில் எமது நிறுவனத்தைச் சேர்ந்த 90% மாணவர்கள் சித்தியடைந்தமையையிட்டு பெருமைப்படுவதுடன் அவர்களுக்கு நமது நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

பதிவாளர்,

**ASTAN INSTITUTE**

166/1 HOSPITAL ROAD, JAFFNA.

Branch: 101/1, STANLY ROAD, JAFFNA.

[A2564]


## ஜனாதிபதி – கல்கட் சந்திப்பு

(கொழும்பு)

இந்திய அமைதிப்படைத் துணைத்தளபதி மேஜர் ஜெனரல் ஏ. எஸ். கல்கட் கொழும்பில் ஜனாதிபதி திரு.ஜே ஆர். ஜெயவர்த்தனவை நேற்றுச் முன்தினம்சந்தித்து பேச்சுவார்த்தைநடாத்தினார்.

இச் சந்திப்பின்போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஜே. என். டிக்ஸிற்றும் உடனிருந்தார். (ஒ)

## இப்படியும் நடக்கிறது

கடந்த மாதம் 26-ம் திகதி இந்தியாவில் நடைபெற்ற குடியரசு தின வைபவத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதும், ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் திரு. லலித் அத்துலத்முதலியும், திரு. காமினி திஸநாயக்காவும் புதுடில்லி சென்றிருந்ததும் தெரிந்ததே.

இந்தியா புறப்படுவதற்கு முன்னர், அங்கு என்னென்ன விஷயங்கள் பற்றி 'அலச' வேண்டும் என்று ஜனாதிபதியுடன் இரண்டு அமைச்சர்களும் ஆலோசனை நடத்தினார்கள்.

இதில் ஒரு விஷயம்; உதவிக்கு 'வந்தவர்களை' விரைவாக ஊருக்கு அனுப்புவது என்பதுதான். இந்த 'சப்ஜக்டில்' ஒரு அமைச்சர் மிகவும் தீவிரமாக இருந்ததுடன் "இந்தியா போனதும் எனது முதல் காரியம் இதுதான்" என்று உள்ளூர்ப் பத்திரிகைச்கும் பேட்டி அளித்ததுடன் இலங்கைப் பாராளுமன்றத்திலும் அதிகமாகப் பேசிவிட்டார்.

ஜனாதிபதி பி. பி. ஸிக்கு அளித்த ஒரு பேட்டியில்; 'வந்தவர்கள்' விஷயத்துக்கு இந்தியாவில் நடைபெறும் பேச்சுக்களின்போது முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று கூறியிருந்தார்.

இந்தியா சென்றார்கள். குடியரசுதின வைபவத்திலும் கலந்து கொண்டார்கள்.

வீரத்துடன் கடமையாற்றி இங்கு உயிர் நீத்த ஒரு தமிழ் மேஜருக்கும், மற்றமொரு படைத் தளபதிக்கும் இந்தியாவின் உயர் இராணுவ விருதுகள் வழங்கப்பட்ட நிகழ்ச்சி... நம்மவர் மூவர் மனதிலும் எதனை உருவாக்கியதோ தெரியவில்லை......இந்தியத் தலைவர்களுடன் நடைபெற்ற முக்கிய பேச்சுக்களில்; உதவிக்கு இங்கு 'வந்தவர்களை' விரைவாக அவர்களின் ஊருக்கு திருப்பி அனுப்பும் 'சப்ஜக்டே' வரவில்லையாம்!

இங்கு ஏற்பட்ட மனக்கொதிப்பு...அங்கு போனதும் மனமாற்றமாக ஏற்பட்டுவிட்டது போலும்.

ஊடுருவி.

## கோள்மண்டலம் மீண்டும் திறக்கப்படுகிறது

(கொழும்பு)

பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பல காலம் மூடப்பட்டிருந்த 'கோள் மண்டலம்' மீண்டும் திறக்கப்படவுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகப் பிரதேசத்தில் அமைந்துள்ள இக்கோள் மண்டலத்தின் திருத்த வேலைகளுக்கு கல்விச் சேவைகள் அமைச்சு எட்டுலட்சம் ரூபாவை இவ்வருடம் செலவிடவுள்ளது என்று அமைச்சின் உயர் அதிகாரியொருவர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

இக்கோள் மண்டலம் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமெனத் திங்கள், சனி நாட்களைத் தவிர்ந்த ஏனைய தினங்களில் திறந்திருக்கும். மாணவர்களுக்கு ஒரு ரூபாவும், பொதுமக்களுக்கு இரண்டு ரூபாவும் அறவிடப்படும்.

ஒவ்வொரு மாதமும் மாணவர்களுக்கெனத் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் சிறப்பு விரிவுரைகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வானசாஸ்திரம், பௌதீகம், விண்வெளியியல், பூகோளவியல் ஆகிய விடயங்களில் தேர்ச்சிபெற்றவர்கள் இவ்விரிவுரைகளை நடத்துவரெனவும் அறிவித்தார். (து)

## தரையில் வாடும் மாணவர்கள்

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் தளபாடத் தட்டுப்பாட்டினால் மாணவர்கள் நிலத்திலிருந்து கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மைக்கால அசம்பாவித சம்பவங்களின்போது இந்த வித்தியாலயத்திலிருந்த தளபாடங்களில் பல சேதமடைந்தும் காணமலும்போய்விட்டதாக அறியப்படுகின்றது அத்துடன் அலுமாரிகள் உடைக்கப்பட்டு மாணவர்களின் பதிவேடுகளும், உபகரணங்களும் காணமற்போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை இவ்வாண்டு புதிதாக எட்டாம் ஆண்டு வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வித்தியாலயத்திற்குத் தேவையான வாங்கு, கதிரை, மேசை ஆகிய தளபாடங்களைத் தந்து உதவுமாறு மேலிடத்தை வித்தியாலய அதிபர் திரு. நா. க. தங்கரத்தினம் கேட்டுள்ளார்.

## வேம்படி சித்திவிநாயகர்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் வேம்படி சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிறுக்கிழமை ஆலய முன்றலில் நடைபெறும். கூட்டத்தில் நடப்புவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெறும்.

## மனநோயாளருக்கு சிகிச்சை

(மட்டுவில்)

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் மனநோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இதைத்தொடர்ந்து, 25ம் திகதி விசேடமாக மனநோய் வைத்திய நிபுணர் ஒருவர் இங்கு விஜயம்செய்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

## மணிவாக்கு

அரசியலுக்குள் சிலர் பிரவேசிப்பது நல்லது செய்வ தற்காகவல்ல, நன்ருய் இருப்பதற்காக.

—ரூதர்போட் பி ஹேயஸ்.

# நமது நோக்கு

## திருமதி சந்திரிகாவின் தலைமை!

அரசியலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு எதிர் பாராத முடிவுகள் ஏற்படு வது சர்வசாதாரணமாக இருக்கின்றது.

முடிவுகள் சிலசமயங்க ளில் அவர்களை மிகஉயர்ந்த நிலைக்கு கொண்டுபோய் விடுகின்றன.

அதனுல் அவர்களது அர சியல் எதிரிகள் அதிர்ச்சிக் குள்ளாகின்ருர்கள். பொரு மைப்படுகின்ருர்கள். காலை வாரிவிடுவதற்கான சந்தர்ப் பத்தை ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்திருக்கிருர் கள்.

முடிவுகள் இன்னும் சில சமயங்களில், ஒருவரின் புகழை மழுங்கடித்து விடு கின்றன. உயர்ந்த நிலைகளி லிருந்து அதலபாதாளத்துக் கும் தள்ளிவிடுகின்றன அதி லிருந்து அவர்கள் மீள்வதே முடியாமல் போய்விடுகின் றது

எதுவாஞலும் இன்றைய காலகட்டத்தில் அரசியல் ஆனது பொது மக்களின் நன்மையைப் பொறுத்து நடத்தப்படுவதாகப் பிரசா ரம் செய்யப்படுவதால் எந்தவித அரசியல்நடவடிக் கையும் மக்களின் மனுேநிலை யில் பிரதிபலிப்புக்களை ஏற் படுத்தாமல் விடுவதில்லை.

இன்றையமக்கள் சமுதா யம் முன்போல்அன்றி எதை யும் உன்னிப்பாகக்கவனித்து உள்வாங்கிக்கொண்டு சரி யானசந்தர்ப்பத்தில் அதனை சரியாக வெளிப்படுத்தும் தன்மையை பெற்றிருக்கின் றது என்பதை அவதானிக்க முடிகின்றது.

எனவே மக்களுக்காக வென்றுஆரசியலில் ஈடுபடும் மனிதர்கள் மக்களின் கண் காணிப்பிலிருந்து தப்பி விடுவதாகக் கருதிக்கொள் வது தவறு.

சரியாகவோ, தவருகவோ மக்கள் நன்மைக்காக நாட் டின் நன்மைக்காக,நேர்மை யாகஉழைக்கும் மனிதர்களை ஒருபோதும் மக்கள் மறந்து விடுவதில்லை. அப்படியான வர்கள் இறந்த பின்பும் வாழவே செய்வார்கள். அதற்கு நம் மத்தியிலேயே ஏராளமான முன் உதார ணங்கள் உண்டு.

அண்மைக்காலத்தில் அரசியலில் தீவிரமாக ஈடு பட்டு, இந்த நாட்டின் முக்கிய இரு பெரும் இன மக்களும் ஒன்றுபட்டு சுமுக மாக வாழ்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த மகா ஜனக்கட்சியின் தலை வர் திரு. விஜேகுமாரண துங்க படு கொலை செய்யப் பட்டதானது அவர் இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தத்தை ஆதரித்தவர் என்பதற்காக மட்டுமே என்று கருதி விடமுடியாது அரசியல் துறையில் இரு இனங்கள் மத்தியிலும் ஏனை யோர்பொருமை கொள்ளும் அளவுக்கு அவர் பிரபல்யம் பெற்றுவந்தமையும் ஒரு முக்கிய காரணம் எனலாம்.

இவரது துணைவியார் திருமதி சந்திரிக்காவின் தந்தையாரும், இலங்கை யின் முன்னுள் பிரதமரு மான எஸ் டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் தமிழர் பிரச்சினை களை முன்வைத்தே தென் னிலங்கை அரசியலில் பிர பல்யம் பெற்ருர். - குறிப் பாக தமிழ் மொழியை மூன்ரும் இடத்தில் கூட வைக்காது பின் தள்ளி விட்டு சிங்களத்தை முதன் மைப்படுத்திஞர்.

பின்னர் இந்த தவறினை ஓரளவு உணர்ந்து சில மாற்றங்களைச் செய்ய முயன்ற வேளையில், தமிழ ரின் நியாயமான நிலைப் பாட்டை உணரத்தலைப் பட்டிருந்த சமயத்தில் படு கொலை செய்யப்பட்டார்.

அவர் விட்ட தவறுக்கு பிராயச்சித்தம் செய்வது போல் அவரது மருமகனுர் ஆரம்பித்த நடவடிக்கை களுக்கு முற்றுப்புள்ளி வைக் கும் விதத்தில அவரையும் இப்போது படுகொலை செய்து விட்டார்கள். அவர் விட்ட இடத்திலி ருந்து அப்பணியைத் தொடர்வதற்கு அவரது துணைவியார் சங்கற்பம் செய்திருப்பதாக அறிகின் ரும்.

இலங்கையின் கடந்த கால அரசியல் அதிகா ரத்தை மாறி மாறிக் கைப் பற்றி வந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி போன்ற பழைய கட்சிகளின் பத் தாம் பசலித்தன்மையில் இருந்து தென்னிலங்கை மக்கள் விடுபடவேண்டு மாஞல், புதிய சிந்தனையும் புதிய அரசியல் வழிகாட் டலும் அவர்களுக்குத் தேவை. அந்த வகையில் திருமதி சந்திரிக்கா குமா ரணதுங்காவின் தலைமை யும் சிந்தனையும் கொள்கை யும் உதவ முடியும். அது இந்த நாட்டில் சகல மக் களும் நம்பிக்கையோடும் ஒருமைப்பாட்டோடும் ஒற்றுமையாக வாழ்ந்திட வழிசமைத்திட முடியும்.

# அறவழியில் 9 ஆண்டுகள்

### என். கே. துரைசிங்கம்

சமூக சீர்திருத்த புரட் சியை ஏற்படுத்தும் நோக்கு டன் 1979 - ல் துளிர்விட்ட அமைப்புத்தான் அறவழிப் போராட்டக்குழு

கைதடி சைவச்சிறுவர்கள் இல்லத்தில் தந்தை செல்வா அறங்காவல்குழு பயிற்சி முகா மொன்றை நடத்திக் கொண் டிருக்கும் பொழுது கைதடிப் பகுதி மக்களிடையே ஏற் பட்ட சாதிப் பிரச்சினையை அறிந்த பயிற்சியாளர்களும், அறங்காவல் குழுவினரும் ஒன்றிணைந்து பிரச்சினையைச் சந்தக்கப்புறப்பட்ட வேளை யில் தான் இந்த அறவழிப் போராட்டக்குழு உதய மானது.

தந்தை செல்வ அறங்காவல் குழுவைச் சேர்ந்த பேராசிரி யர் கூ. நேசையா, க. சச்சி தானந்தம், கோப்பாய் முன் ஞள் எம். பி. சி கதிரவே லுப்பிள்ளை ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குழு இன்று தனது ஒன்பதா வது ஆண்டு பூர்த்தியை எளி மையாகக் கொண்டாடுகிறது

எமது சமுதாயத்தில் புரை யோடிப்போயிருக்கும் சாதி, சீதனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் ஆரம் பத்திலிருந்து ஈடுபட்டு வந்த அறவழிப்போராட்டக்குழு இந்தத்துறையில் பல வெற் றிப் படிகளைத்தாண்டியுள் ளது.

### சமத்துவ வழிபாடு

யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலுமுள்ள ஒடுக்கப் பட்ட மக்களின் வழிபாட் டிற்காக நூற்றுக்கணக்கான ஆலயங்கள் அறவழிப் போராட்டக்குழுவினுல் திறந்துவிடப்பட்டு அங்கு சமத்துவ வழிபாட்டிற்கான வழிவகைகளும் இவர்களால் ஏற்படுத்தப்பட்டன.

புத்தூர், வேம்பிராய் பகுதி யில் வீடில்லாமலிருந்த ஐம் பத்தைந்து குடும்பங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்து அரசினரின் உதவி யுடன் இங்குள்ள மக்கள் வீடு கள் பெறவும் அறவழிப் போராட்டக்குழு உதவியுள் ளது.

### அகதிகளுக்கு சேவை

1983 - ல் நடந்த இனக்கல வரத்தால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த தமிழ் மக்களை நேசக்கரம் நீட்டி அரவணைத்து கைதடி யில் பெரியதொரு முகாம் அமைத்து இரண்டு வருடங்க ளாகஅவர்களுக்குஉண வுஉடை உறையுள் கொடுத்து பரா மரித்து வந்ததுடன் மட்டும் நில்லாது இந்த மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையை யும் மேற்கொண்டது.

மறவன்புலோ செற்பலி ஆகிய கிராமங்கள் இந்த புனர் வாழ்வுப் பணிக்கு உதா ரணமாக இன்று திகழ்கின் றன.

1984 -ம் ஆண்டு திருமலை, மட்டக்களப்பில் இடம் பெற்ற கலவரங்களால் பாதிக்கப் பட்டுவந்த ஆயிரக்கணக்கான மக்களை ஒன்றரைவருடங்களாக பராமரித்து வந்ததுடன் அவர் கள் மீண்டும் தமது இருப்பி டங்களுக்கு திரும்பிச் சென்று வாழ்வதற்கும் அறவழிப் போராட்டக்குழு வழிசெய் தது.

### கல்விப்பணி

1985ம் ஆண்டிலிருந்து கிளி நொச்சி, யாழ். மாவட்டங்க ளிலுள்ள பின்தங்கிய நாற் பது கிராமங்களில் சிறுவர் பாடசாலைகள் ஆரம்பித்து இளஞ்சிறுர்களின் கல்விவளர் ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் அறவழிப்போராட்டக்குழு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 15ம் திகதி தமிழ்ச் சிறுவர் தின விழா நடத்தி சிறுவர்களி டையே இலைமறை காயாக இருக்கும் திறமைகளை வெளிக் கொணரும் பணியிலும் அவர் கள் ஆற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் பணி யிலும் ஈடுபட்டுவருகின்றது.

### நூல்வெளியீடு

சத்தியமும் அறவழியும், மனித உரிமைகள், காந்தி திரைப்பட விமர்சனம், சமா தானத்திற்கொரு சந்தர்ப் பம் கொடுப்போம் என்ற நூல் கள் உட்பட ஆங்கிலத்திலும் பல நூல்களை வெளியிட்டுள்ள அறவழிப்போராட்டகுழு. அறவழி என்னும் தமிழ் சஞ் சிகையையும் என். ரி. டி. ஏ ஜீ றிப்போர்ட் என்ற ஆங்கில சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறது.

அறவழிப்போராட்டக்குழு விஞல் வெளியிடப்படும் அனை த்து வெளியீடுகளுக்கும் குழு வின் பொதுச்செயலாளர் க. ஜீவதாஸ் ஆசிரியராகப் பொறுப்பேற்று அரும்பணி யாற்றிவருகின்ருர்.

ஜீவா அண்ணு என்று செல் லமாக அனைவராலும் அழைக் கப்பட்டுவரும் இவரை அற வழிப்போராட்டக்குழுவின் அச்சாணி என்று வர்ணிக்க லாம்.

இக்குழுவின் தலைவராகப் பணியாற்றுபவர் வி. எஸ் துரைராசா அவர்கள் யாழ் குடாவிலுள்ள மக்களினுல் மிக வும் பிரியமாக நேசிக்கப்பட்டு வரும் திரு. துரைராசாவின் முயற்சியே அறவழிப் போரா ட்டக்குழு பல சமுதாயப் புரட் சிகளை ஏற்படுத்த ஊன்று கோலாக இருந்தது,

### புலமைப் பரிசில்

யாழ் குடாநாட்டில் நிகழ் ந்த வன்செயல்களினுல் தந் தையை இழந்த நூறு மாண வர்களுக்கு புலமைப்பரிசில் சிட்டமொன்று கடந்தாண்டி லிருந்து நடைமுறைப்படுத்தப் பட்டுவருகிறது.

இப்பணி டென்மார்க்போர் எதிர்ப்பாளர் சங்கத்தின் அனு சரணையுடன் நடைபெற்றுவரு வதாக குழுவின் செயலாளர் தெரிவித்தார்

ஐரோப்பிய நாடுகளிலுள்ள தமிழ் இளைஞர்களின் உதவியு டன் இயங்கி வரும் அறவழிப் போராட்டக்குழுவிற்கு மதுரை, சுவிஸ்லார்ந்து ஆகிய இடங்களில் இரு கிளைகள் இயங்கி வருகின்றன.

செயலாளர் உட்பட ஆறு ஊழியர்கள் குழுவின்முழுநேர ஊழியர்களாக கடமையாற்றி வருவதுடன் நூற்றுக்கணக் கான தொண்டர்கள் பகுதி நேரமாக கடமையாற்றுகின்ற னர்.

### அறவழிவாழ்வு நிலையம்

இன்று ஒன்பதாவது ஆண் டுப் பூர்த்தியைக் கொண்டா டும் அறவழிப் போராட்டக் குழிவின் மேலும்ஒருபணியாக அறவழிவாழ்வு நிலையமொன்று நுணுவில்கண்டி வீதியிலுள்ள தனியார் கட்டிடமொன்றில் திறந்துவைக்கப்படுகிறது.

பண்டிதர் சிவலிங்கத்தால் திறந்துவைக்கப்படும் இந்த அறவழிவாழ்வு நிலையம் தங்கு மிடம், பயிற்சிமண்டபம், சிறு கைத்தொழில் உட்பட பல வேலைத்திட்டங்களை உள்ளடக் கியதாக அமைக்கப்பட்டுள் ளது.

# மகாமாரியம்மன் அருள் நகைகள் மீண்ட அதிசயம்!

(பலாலி)

தெல்லிப்பழை மகாமாரி யம்மன் ஆலயத்தில் கொள்ளை யடிக்கப்பட்ட ஒன்றரை லட் சம் ரூபா பெறுமதியான நகைகள், கொள்ளையடிக்கப் பட்ட மறுதினமே அர்ச்சகர் சைக்கு கிடைத்துள்ளன!

இவ்வார முற்பகுதியில் கோயிலில் இரவுவேளை உட் புகுந்த கொள்ளையர், விக்கிர கத்தில் இருந்த அங்கிகள் உட் பட அதிகமான நகைகளை கொள்ளையடித்து சென்றனர்.

அடுத்தநாள் கோவிலுக்கு பூசைசெய்யசென்ற அர்ச்சகர், நகைகள் கொள்ளையடிக்கப் பட்டதைக்கண்டு இந்திய அமைதிகாக்கும் படையின ரிடம் புகார்செய்தார்.

மறுநாள் மலை, நகைகள் ஓரிடத்தில் காணப்பட்டதாக ஒரு நபர் அர்ச்சகரிடம் அந்த நகைகளை ஒப்படைத்தார். மகாமாரியம்மனின் அருளால் தான் இந்த நகைகள் மீளக் கிடைத்துள்ளன என்று அர்ச் சகர் தெரிவித்தார்.

## மாணவர்களுக்கு இலவசபயிற்சி பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் ஏப்ரல் மாதத்தில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சைக்கு மாணவர்களைத் இலவசமாகத் தயார்செய்வதற்கு யாழ்ப் பாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையமொன்று முன் வந்துள்ளது

இந்நிலையம்தமது நிறுவனத் தில் பதிவுசெய்து சுட்டிலக்கங் களைப் பெறுபவர்களுக்கு இல வச பயிற்சிப் பரீட்சையை நடத்தி மாணவர்களின் ஆற் றலை வெளிப்படுத்தும் இதற்கு எதுவித கட்டணமும் அற விடப்படமாட்டாது என்று யாழ்.விக்னு கல்விநிலைய இயக் குநர் "ஈழநாடு"வுக்கு தெரி வித்தார்

இப்பரீட்சையில் சகலபகுதிக ளிலுமுள்ளவர்களும் பங்கு கொள்ளலாமென அறிவிக்கப் பட்டுள்ளது. [கை]

## உங்கள் வாகனம் கடத்தப்பட்டால்...

யாழ்ப்பாணம்]

வடபகுதியில் எந்த ஒரு வாகனமும் கடத்தப்படும்பட் சத்தில் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகிலுள்ள இந் திய அமைதிப்படைமுகாமுக்கு உடனடியாக அறிவிக்கும்படி யாழ் கொமாண்டிங் அலுவல கம் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறது

### தவக்கால நற்சிந்தனை



9 - நாள்

## கேளுங்கள் கொடுக்கப்படும்!

"கேளுங்கள் கொடுக்கப் படும், தேடுங்கள் கண்டடை வீர்கள்!" என்று எம் ஒவ் வொருவரையும் செபிக்க அழைக்கின்றது இத் தவக் காலம். நாம் நன் நிலையில் வாழும்போது இறைவனை மறந்தும், துன்புறும் வேளையில் அவரை அழைப்பது தான் எமது செப வாழ்வா? தேவை களைப் பட்டியல் போட்டுக் கேட்பதுதான் செபமா? இல்லை செபம் எம்மில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். செபத் திஞல் நான் இறைவனைச் சந்திக்கிறேன், இறைவனுக்கு அண்மையில் நெருங்கிச் செல் கிறேன். இவ் உறவு என்னில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்து கின்றது ஆனுல் பெரும்பாலும் எமது செபங்கள், "நீங்கள் உதட்டினுல் என்னைப் போற்று கின்றீர்கள். ஆனுல் உங்கள் உள்ளமோ எனக்கு வெகு தொலைவில் உளளது. உங்கள் செபங்கள் எல்லாம் வீண்" என்ற இசையாஸ் இறைவாக் கின்படி வாயினுல் பிதற்றும் செபங்களாகவே இருக்கின் றன. இறைவனைச் சந்திப்பது மில்லை. உள்ளத்தைத் தொடு வதுமில்லை, மனத்தை மாற்று வதுமில்லை.

மரிய செபஸ்ரியன்
அ. ம. தி-

## மலிவு விற்பனை

26-2-88 தொடக்கம் 4-3-88 வரை சகலவிதமான

★ கலர் பப்ளின்
★ பிரிண்டட் சீத்தை
★ பிரிண்டட் பொலீஸ்டர்
★ சேட்டிங் 80 X 20

போன்றவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஹோம் பிறின்ஸ் லிமிடெட்,**
155 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். [எ 354]



# இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ மகாநாடு

சில காரியம் மனிதனுக்கு நூதனமாக தெரிந்தாலும் உண்மை உண்மையே!

நாம் காணாத சிலதை காணும்போது வியப்படைகின்றோம் கங்காரு என்னும் மிருகம் தன் குட்டியை தன் வயிற்றின் பையில் வைத்துச் சுமக்கும் போது ஆச்சரியத்துடன் நாம் வியப்படைகின்றோம். நம் வீட்டில் வாழும் பூனையும், நாயும் அப்படி செய்வதில்லை. நாம் காணாததை காணும்போது கண்கள் பூத்துப்போகின்றன நாகரிகம், விஞ்ஞானம் இருக்கும் போதும் தெய்வத்தின் செயலும் உண்டு!

தெய்வத்தை காணாதவருக்கு இது வியப்பாக இருக்கும் கண்டவர்களுக்கோ அருட்கலனாக இது இருக்கின்றது தெய்வம் மறைந்துவிடவில்லை. அவர் ஜீவிக்கின்றவராக இருக்கின்றார்! நமது கண்ணீரான வாழ்வை மாற்றுகிறார். இந்த அடிப்படையில் மார்ச் 6 ம் திகதி முதல் 13ம் திகதிவரை சுகததாச உள்ளரங்கில் தெய்வீக விடுதலை ஆராதனையும், மார்ச் 4-13 வரை வேத பயிற்சியும், வேதாய்வு கூட்டமும் நடைபெறும் இக்காரியங்களில் கலந்து தெய்வீக அருளைப் பெற விரும்புபவர்கள் உடனடியாக அறிவிக்கவும். தங்குமிடம், உணவுவசதி செய்து கொடுக்கப்படும். வடகிழக்கு மக்களுக்கு விசேஷ அன்பு அனுசரணை காட்டப்படும். மேற்கண்ட விபரங்களுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!
தெய்வீக அருளைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

**"இயேசு ஜீவிக்கிறார்"**
த. பெ 1044,
கொழும்பு.
[சி 2523]


## வழக்குநர்களைப் பதிவுசெய்தல் 1988

### வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

1988 ம் ஆண்டுக்குக் கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவுக்கட்டணத்தை செலுத்தியதன் பேரில் என்னால் 1988-03-10 ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொன்றிற்குமான விண்ணப்பங்கள் அவற்றிற்கான பதிவுக்கட்டணத்துடன் தனித்தனியே சமர்ப்பிக்கவேண்டும். விண்ணப்பங்களை தபாலில் அனுப்புவோர் பதிவுக்கட்டணத்தை காசோலைஆக அல்லது தபாற்கட்டளையாக விசேட ஆணையாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்ற பெயரில் அனுப்பிவைக்க வேண்டும்.

| பொருட்கள் சேவைகள் | பதிவுக்கட்டணம் |
|---|---|
| 1. காகிதாதிகள் | ரூபா 25-00 |
| 2. சுகாதார சேவைக்கான பொருட்கள் | ரூபா 25-00 |
| 3. அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் வழங்குதல் | ரூபா 25-00 |
| 4. மின்சாரப் பொருட்கள் வழங்குதல் | ரூபா 50-00 |
| 5. 1988 ம் ஆண்டுக்கான வாகனத் தகடுகள் தயாரித்தல் | ரூபா 25-00 |
| 6. சீருடைகளுக்கான துணிகள், சப்பாத்துக்கள் வழங்குதல் | ரூபா 25-00 |
| 7. வீடுகளுக்கு உள்ளக மின் இணைப்பு செய்தல் | ரூபா 50-00 |

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**து. வைத்திலிங்கம்,**
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
[எ 345]

இலவச உணவுப்பொருள் விநியோகம் :

# ப. நோ. கூ. சங்கங்கள் எதிர்நோக்கும் நிதிநெருக்கடி

(மாவிட்டபுரம்)

"அடுத்த மூன்று வாரத்திற்கான இலவச உணவுப் பொருள் விநியோகத்தை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பில் விடுவதால் அவை பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கும் நிலை ஏற்படும் இதனால் இலவச உணவுப்பொருள் விநியோகத்திலும் தடங்கல் ஏற்படலாம். ஆகவே ப.நோ கூ. சங்கங்களின் நிதி நெருக்கடியைச் சமாளிக்க அவற்றுக்கு முற்பணம் வழங்கப்பட வேண்டும்."

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபரைக் கோரும் மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு எஸ். சிவமகாராசா அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார். அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"கடந்த அக்டோபர்மாதம் தொடக்கம் அல்லல்படும் மக்களுக்கு ஜனவரி 28-ம் திகதி முதல் இலவச உணவு விநியோகம் செய்யப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது ஆனால் இப்பொழுதுதான் இவ்விநியோகம் தொடங்கியுள்ளது முதல் வாரத்திற்குரிய பொருள்கள் மட்டும் உணவுத்திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று வாரத்திற்கும் எந்தப் பொருளும் வழங்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஒரு வாரத்திற்கு இந்த இலவச உணவுப் பொருள்களை வழங்க ஒவ்வொரு சங்கத்திற்கும் பல லட்சம் ரூபா தேவைப்படும். இலவச உணவு விநியோகத்திற்குரிய உணவுப் பொருள்களை உணவுத் திணைக்களமே வழங்குமென முன் கூறப்பட்டது. ஆனால் இப்போது நிலைமை வேறுமாதிரித் தெரிகின்றது அவ்வாறாயின் ப. நோ கூ சங்கங்கள் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும்.

"1987 ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வழங்கப்பட்ட இலவச உணவு விநியோகத்திற்குரிய பணம் இன்னமும் கச்சேரியால் தந்துமுடிக்கப்படவில்லை. அத்துடன் அக்டோபர் மாதத்திலிருந்து ஏற்பட்ட குழப்பங்களால் சங்கங்கள் பாரிய இழப்புக்களையும், நஷ்டங்களையும் அடைந்துள்ளன.

இதற்கு இன்றுவரை நஷ்டஈடு எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே இந்நிலையில் இலவச உணவு விநியோகத்திற்குரிய பொருள்களை உணவுத் திணைக்களத்தினால் வழங்கமுடியாத நிலை ஏற்படுமானால் சங்கங்களுக்கு தேவைப்படும் உணவுப் பொருள்களின் பெறுமதியில் அரைவாசிப் பங்குக்குரிய தொகையாவது முற்பணமாக சகல ப நோ கூ சங்கங்களுக்கும் வழங்கவேண்டும்,

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி தேவரட்ணம் இந்திராணி

தோற்றம்: 18-2-1942
மறைவு: 27-1-1988

நிகழும் பிரபவ வருடம் தை மாதம் 13ம் திகதி (27-1-88) புதன்கிழமை இரவு 8 மணியளவில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் திருமதி தேவரட்ணம் இந்திராணியின் இறுதிக்கிரியையில் கலந்து எமக்கு ஆதரவளித்த அன்பர்கள், நண்பர்கள், உறவினர் யாழ். இந்து உயர்தர மாணவர்களுக்கும் யாழ். இந்து மகளிர் க. பொ. த. சாதாரணவகுப்பு மாணவிகளுக்கும் ஆசிரியர், ஆசிரியைகள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றி அறிதலை மனமுவந்து தருவதோடு, 25-2-88 வியாழக்கிழமை காலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் 26-2-88 வெள்ளிக்கிழமை காலை 10.00மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கணவன், பிள்ளைகள்,
தாய் சகோதர சகோதரிகள் குடும்பத்தினர்
மைத்துனர்கள்.
மைத்துனிமார் குடும்பத்தினர்.

இல. 3, சீனியர்ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(சி 2547)


## A. A. T. (Sri Lanka)

### Stage I

G. C. E. (O. Level) 6 passes with 3 credits இருந்தால் நீங்களும் ஒரு Accounting Technicians ஆகலாம், எதிர்காலத்தில் அரசாங்கம், கூட்டுத்தாபனம் தனியார் கம்பனிகளில் வேலை வாய்ப்புப்பெறுவதற்கு அரிய சந்தர்ப்பம்,

வகுப்புக்கள் ஆரம்பம் 6-3-88

by

Qualified experienced and dedieated panel of Lecturers

**CANTABIA INSTITUTE**

13, RASAVIN THODDAM LANE,
(ஸ்ரான்லி றோட் முடிவுக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்,
(ஏ 351)



## G. C. E. O/L 1988

### பயிற்சிப் பரீட்சை

எதிர்வரும் ஏப்ரல் மாத முற்பகுதியில் நடைபெறவிருக்கும் G C E. O/L பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை [PRACTICE EXAM] எமது நிறுவனத்தில் மாணவர்கள் நலன்கருதி நடைபெறவுள்ளது.

★ G. C. E. [O/L] எடுக்கும் எல்லா வெளிமாணவர்களும் அனுமதிக்கப்படுவர்.

★ எல்லாப் பாடங்களாலும் பரீட்சை நடாத்தப்படும்

★ பரீட்சை எடுத்த மாணவர்களின் புள்ளி விபரங்களை அறிவிப்பதுடன் எமது ஆசிரியர்களால் ஒவ்வொரு பாட வினாத்தாள்களும் மாணவர்களுக்கு விளங்கப்படுத்தப்படும்.

★ பரீட்சை எடுக்கும் மாணவர்கள் 5-3-88 க்கு முன்பே பதிவுசெய்து உங்கள் சுட்டிலக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும். பரீட்சை ஆரம்பமாகும் திகதியும் நேர அட்டவணையும் அறிவிக்கப்படும்.

★ மாணவர்களின் நலன்கருதியே இப்பரீட்சை நடாத்த இருப்பதால் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

Practise Your Exam and Be ready for the exam.

**விக்னா டியூஷன் சென்ரர்,**
52 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[எ352]

# "புரட்சித் தலைவரின் ஆட்சியை மீண்டும் நாங்கள் அமைப்போம்"

## ஆர். எம். வீரப்பன் சூளுரை

"வஞ்சக மூலாம் பூசிய கவர்ச்சி வெல்லப்போகிறதா? கண்ணீரைச் சிந்தும் தூய்மையான தாய்மை வெல்லப் போகிறதா? என்பதை நடைபெறப்போகும் தேர்தல் நிரூபிக்க இருக்கிறது. வாக்குறுதிகளை வாரி வழங்க நாங்கள் தயாராக இல்லை. துரோகத்தால் அழிக்கப்பட்ட புரட்சித் தலைவரின் ஆட்சியை மீண்டும் நாங்கள் அமைப்போம்''.

அ. இ. அ. தி. மு. க. (ஜானகி பிரிவு) முக்கிய பிரமுகரான திரு. ஆர். எம். வீரப்பன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"புரட்சித் தலைவருடைய பாதை என்பது 50 ஆண்டு காலம் தொடர்ந்து பாடுபட்டு ஒவ்வோர் அங்குலம் அங்குலமாக நகர்ந்து, எதிர்ப்புக்களைச் சந்தித்து, சந்தித்த எதிர்ப்புக்களை முறியடித்து, கடுமையாக உழைத்து, முன்னேறிவந்த பாதையாகும். பேரறிஞர் அண்ணா போன்ற மாபெரும் தலைவர்களிடத்தில் 15 ஆண்டுகளுக்கு மேல் அடக்கமாக, கட்டுப்பட்ட ஒரு மாணவனாக, தலைவனை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் தொண்டனாக உருவாகி, நடந்துவந்த பாதைதான் புரட்சித் தலைவர் பாதை.

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே'' என்ற பாடலுக்கு ஏற்ப, புரட்சித் தலைவருக்கு கூட்டம் கூடுகிறது; திரைப்படக் கவர்ச்சி நடிகை என்பதாலே தனக்கும் கூட்டம் கூடுகிறது ஆகவே புரட்சித்தலைவருடைய பாதையில் நடப்பதற்கு தான் மட்டுமே வாரிசு என்று ஆணவத்தோடு அவர் (ஜெயலலிதா) சொன்னால் இந்த ஆணவத்திற்கும் அகங்காரத்திற்கும் தமிழகம் விரைவில் பதில் சொல்லும்.

1984ம் ஆண்டு தேர்தலில் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்து வெற்றியைத் தேடித் தந்தேன் என்று அகங்காரத்தோடு ஜெயலலிதா அம்மையார் கூறியிருக்கிறார். அருமை நண்பர் பாக்கியராஜும் பல பகுதிகளில் 1984ல் தேர்தல் சுற்றுப்பயணம் நடத்தியிருக்கிறார். அவர் போன இடங்களில் எந்த இடத்திலும் கழக வேட்பாளர் தோற்கவில்லை. ஆனால் இந்த அம்மையார் அகங்காரத்தோடு, "என் வேண்டுகோளை மக்கள் ஏற்றனர்; மகத்தான வெற்றியை ஈட்டித்தந்தனர்'' என்று தெரிவிக்கிறாரே. இந்த மமதையை முறியடித்துக் காட்டுவதைப் போல, இந்த அம்மையாருடைய தளபதிகள் என்று இவர் எண்ணி, தெருத்தெருவாக, சுற்றிச்சுற்றி வாக்குகள் கேட்டாரே. பாளையங்கோட்டைத் தொகுதி, கோயம்புத்தூர் கிழக்கு தொகுதி, திருப்பூர் தொகுதி என்று அந்தத் தொகுதிகளில் இவருக்கு நெருக்கமானவர்களாக இருந்த கழக வேட்பாளர்கள் தோற்றுவிட்டனரே.

புரட்சித் தலைவர் ஈடு இணையற்ற வெற்றி வீரராக, இரண்டுதேர்தல்களில் வென்றதற்குப் பிறகு இந்த அம்மையார் எதற்காகவோ வந்து இடம்பிடித்துக்கொண்டார். அதற்குப்பிறகு, 1984ம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. தமிழகமே புரட்சித் தலைவர் பக்கம் நின்று வாக்களித்தது. அனுல் 1982-87க்கிடையில் இடையிலே வந்து புகுந்துகொண்டு, புரட்சித் தலைவர் காட்டிய ஆதரவை முதலாக வைத்து, 2, 3 ஆண்டுகளிலே இந்த அம்மையார் நடந்துகொண்ட அடாவடி நடவடிக்கைகளை கண்காணித்தபின்னர் தான் புரட்சித் தலைவர் இந்த அம்மையாரைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எண்ணினார். 1984ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ராஜ்பசபைக்கு இவரை அனுப்பி ஐந்து மாதங்கள் முடிவதற்குள் இவர் இந்தக் கழகத்தைக் காட்டிக்கொடுப்பதற்கும், புரட்சித் தலைவருக்கு துரோகம்செய்வதற்கும், மத்தியிலே உள்ள காங்கிரஸ் கட்சியுடன் பேரம்பேசிய சூழ்ச்சிகள் எல்லாம் புரட்சித் தலைவருக்கு தெரிந்த காரணத்தினுல்தான், 1984ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2ம் நாள் நடைபெற்ற பொதுக்குழுவில் ஆயிரக்கணக்கான கழக முன்னணியினர் முன்னிலையில் இந்த அம்மையாரைக் கொள்கை பரப்புச் செயலாளர் பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டார்கள். பகிரங்கமாக இவருடைய துரோகச் செயல்களை எடுத்துக்காட்டி, விரைவிலேயே இவர் காங்கிரஸ் கட்சியில் போய்ச் சேர்ந்துவிடப்போவதாகவும் சொல்லி, யாராவது அவர் மீண்டும் வர வேண்டுமென்று விரும்பினுல் அவர்கள் இந்த கட்சிக்குத் தேவையில்லை; அந்த அம்மையாரோடு சென்றுவிடலாம் என்றும் பகிரங்கமாக எச்சரித்தார்கள்

ஞானகி அம்மையார் அரசியலுக்கு நுழைவது என்பது அவர்கள் பதவியின் மீது

[7-ம் பக்கம் பார்க்க]

## வயோதிபர் சடலம்

[யாழ்ப்பாணம்]

பெரியவிளான் தெல்லிப்பழை வீதியில், எண்பது வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவரின் சடலம் அனுதரவான நிலையில் காணப்பட்டது.

பொது மக்களும், அமைதிப் படையினரும் இச்சடலத்தை அடையாளம் காணுமலேயே நல்லடக்கம் செய்தனர். [ஓ]

## வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை, நெல்லியடி.

# கேள்வி அறிவித்தல் - 1988.

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1988-ம் ஆண்டு சித்திரை மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1988-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ம் திகதி வரை குத்தகைக்கு விற்பனைசெய்வதற்கு அரக்குமுத்திரையிடப்பட்ட தனித்தனி கேள்விகள் 14-3-88-ந் திகதி நண்பகல் 12 மணி வரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப் பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 11-03-88-ந் திகதி நண்பகல் 12 மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விகள் 14-03-88-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக மூலப்பிரதியை குறிப்பிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் "விசேட ஆணையாளர், வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை நெல்லியடி, கரவெட்டி'' என விலாசம் இட்டு போடுதல் வேண்டும். இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உ. உ. ஆணையாளர் பணிமனை, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் என்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதியிலும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் யாவும் 15-03-88-ந் திகதி காலை 10-00 மணிக்குத் திறக்கப்படும். இச் சமயத்தில் கேள்விக்காரர் அனைவரும் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். சமர்ப்பிக்கப்படும் எந்த ஒரு கேள்வியையோ அல்லது அதன் பகுதியையோ ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைய குத்தகையை எடுத்து நடத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி குத்தகை உரிமையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. மேலதிக விபரங்கள் அறிய விரும்பின் வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இ. ஐயாத்துரை,
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை.

கரவெட்டி.

| குத்தகையின் தன்மை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | மதிப்பிடப்பட்ட தொகை | கேள்வித்தொகையுடன் செலுத்த வேண்டிய மாத வாடகை |
|---|---|---|---|---|
| **வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை. நெல்லியடி உப அலுவலகம்.** | | | | |
| இல.1. மரக்கறிச்சந்தை, நெல்லியடி | 100.00 | 1000.00 | 225.000/- | |
| 2. மீன் சந்தை நெல்லியடி | 50.00 | 500 00 | 41,625/- | |
| 3. கோயில் சந்தை, நெல்லியடி | 25.00 | 500 00 | 12,375/- | |
| 4. கொட்டடிச் சந்தை நெல்லியடி | 10.00 | 250 00 | 990/- | |
| 5. ஆட்டிறைச்சிக்கடை 1,2,3, நெல்லியடி | 50.00 | 500 00 | 8.300/- | 105/- |
| 6. மாட்டிறைச்சிக்கடை 4,5,6 நெல்லியடி | 100.00 | 1000.00 | 150,000/- | 150/- |
| **வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கட்டைவேலி உப அலுவலகம்.** | | | | |
| 1. அல்வாய் மேற்கு, மாணுண்டி சந்தை | 50 00 | 100.00 | 13,000/- | |
| 2. அல்வாய் தெற்கு, புதிய சந்தை | 10 00 | 50 00 | 500/- | |
| 3. துன்னலை, வடக்கு சந்தை. | 10 00 | 50 00 | 700/- | |
| 4. அல்வாய் வடக்கு, ஆட்டிறைச்சிக்கடை | 15 00 | 100 00 | 960/- | |
| 5. துன்னலை வடக்கு, ஆட்டிறைச்சிக்கடை | 15 00 | 100 00 | 960/. | |
| 6. அல்வாய் மேற்கு, மாட்டிறைச்சிக்கடை | 50 00 | 100 00 | 3000/- | |
| 7. அல்வாய் வடக்கு, மாட்டிறைச்சிக்கடை | 50 00 | 100 00 | 22,000/- | |
| 8. கரவெட்டிகிழக்கு, மாட்டிறைச்சிக்கடை | 50 00 | 100.00 | 3,000/- | |
| **வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, உடுப்பிட்டி உப அலுவலகம்.** | | | | |
| 1. உடுப்பிட்டிச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 50 00 | 500.00 | 34,000/- | |
| 2. உடுப்பிட்டிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 15 00 | 250 00 | 925/- | |
| 3. உடுப்பிட்டிச் சந்தை | 50 00 | 250.00 | 23,500/- | |
| 4. நவிண்டில் சந்தை | 50.00 | 250 00 | 3200/- | |
| 5. அந்திரான் சந்தை | 50.00 | 250 00 | 3800/- | |
| 6 கெருடாவில் சந்தை | 15.00 | 100.00 | 875/- | |

(சி-336)

## இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 13 (25-2-1988)
கிழமை- வியாழன்
நட்சத்திரம்- ரோகினி

மேடம்: தொழில் துறையில் சிரமங்கள் தோன்றி மறையும். குடும்பத்திலும் பிரிவு தோன்றும். இனசன விரோதமும் ஏற்படும்.

இடபம்: எதிலும் குறை கேட்க நேரிடும். வாகன விபத்துமேற்பட இடமுண்டு. தொழில் துறையிலும் நிதானம் வேண்டும்

மிதுனம்: காதலர் வாழ்வும் மலரும். கல்வி நிலையும் உயரும் கடமையிலும் முன்னேற வழியுண்டு.

கடகம்: தனதானிய வீழ்ச்சியுண்டு மனையிலும் கருத்து வேற்றுமைகள் தோன்றும். கடன் படவும் நேரிடும்.

சிங்கம்; சகோதர வழியாலும் மனதிற்கு நிம்மதி தோன்றும். வியாபாரவிருத்தியுண்டு. நீண்டநாள் பிணியும் இன்று நிவர்த்தி யாகலாம்.

கன்னி: தொழில் நலனுமுண்டு. தடைகள் பல விலகும். குடும்பத்திலும் இனிமை தவழும்.

துலாம்: நிம்மதி குலையும். கழுகுப்பார்வை வட்டமிடும். முகமன் பேசுவோர் விடயத்தில் அவதானம் வேண்டும்.

விருச்சிகம்: கன்னியர் வாழ்வும் மலரும். நினைத்த காரியம் நிறைவேறலாம் ஆதரவும் பெருகும்.

தனுசு: மனக்கவலைகள் அதிகரிக்கும். செலவுகளைக் கட்டுப்படுத்தவும். வியாபார நஷ்டமும் ஏற்படலாம்.

மகரம்: குருவின் ஆசிகிட்டும் கொடுக்கல் வாங்கல் பிணக்கும் மறையும். கடமையிலும் நன்மை கிட்டும்.

கும்பம்: கடமையும் சிறக்கும். பூமிச் சேர்க்கைக்கு. கனிவான சம்பவங்களும் இடமுண்டாம்.

மீனம்: அன்னியர் உதவியுண்டு. பரோபகாரச் சிந்தை மேலிடும். இருதொழில் பிரியம் ஏற்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# Jaffna College

## Wanted

1. An Accountant capable of also handling routine school office clerical work A knowledge of typing of a reasonable standard will be an added qualification. Should have at least a minimum of five years continous experience in this or similar field of work. Salary negotiable.
2. An honours graduate in Tamil preferably with a good class

Please apply on forms available at the college office on or before 16 th March 1988.

A. KADIRGAMAR,
Principal.

Jaffna College,
Vaddukoddai

A-342



# பிரயாண ஒழுங்குகள்

டுபாய்

யுக்கி தையல் மெஷினில் வேலைதெரிந்த வயது 20 – 40 உட்பட்ட பெண்கள், ஆண்கள் உடனடியாக செல்வதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்:

1. உணவு இருப்பிடவசதி இலவசம்
2. 2 வருட ஒபபந்தம்
3. முற்பணம் அறவிடப்படமாட்டாது
4. பாஸ்போட் 6 படத்துடன் நேரில் சமூகம் தரவும்.

குறிப்பு: எம்மிடம் கடவுச்சீட்டு தந்தவர்களும் இதில் செல்ல விரும்புகின்றவர்களும் எதிர் வரும் 26-2-88 வெள்ளிக்கிழமை நேரில் சமூகம் தரவும்.

தி. பாக்கியநாதன்,
185/2 நியூ லலிதா பில்டிங்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[எ 350]



THE EXPRESS INSTITUTE KOPAY

# A/L - 89

கலை/வர்த்தகம்
சனி, ஞாயிறு

## வகுப்புக்கள்

காலை 6-30 — அரசியல்
திரு. மஹ்றூப்
காலை 7-30 — தமிழ்
திரு. திருஞானம்
காலை 9-00 அளவையியல்
திரு. விக்கி
காலை 10-30 புவியியல்
திரு. வேலாயுதபிள்ளை

ஏ-2596



# நெல்லியடியில்

## வெளிவாரி பட்டப்படிப்புகள்

# G. A. Q. 89

### 10 - 02 - 88 இல் ஆரம்பமாகிவிட்டன

பல்கலைக்கழக பதிவுகள் யாவும் இந்நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும். பல்கலைக்கழக விண்ணப்ப முடிவுத்திகதி நெருங்கிக் கொண்டிருக்கிறது. உங்கள் விண்ணப்பத்துக்கு முந்துங்கள். க. பொ. த. (உயர் தரம்) (கலை, விஞ்ஞான, வர்த்தக பிரிவுகளில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

சென்ற ஆண்டு தொடக்கம் வடமராட்சிப் பகுதியில் முதன் முதலாக பட்டப்படிப்பு வகுப்புக்களை ஆரம்பித்து நடாத்தி வருவது இந்நிறுவனமே.

மேலும் விபரங்கட்கு:

நிர்வாகி
"கெயின்ஸ்"
நெல்லியடி.

ஏ-0346


# புரட்சித் தலைவரின்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட ஆசையால் அல்ல என்பதை அழுத்தம்திருத்தமாக கூறவிரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் உயிரோடு இருந்தவரை தன்னுடைய உறவினர்கள் யாரும் அரசு நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்று கண்டிப்பாக அறிவித்திருந்தார்கள். ஆனால் புரட்சித் தலைவருடைய தமையனார் திரு. எம் ஜி. சக்கரபாணி அரசியலில் ஈடுபடுவதை அவர் அனுமதித்து இருக்கிறார்கள் என்றாலும், திரு எம் ஜி சக்கரபாணியின் குடும்பத்தைச் சேர்ந்த சிலர் புரட்சித் தலைவருடைய பெயரைப் பயன்படுத்தி, தவறான வழிகளில் ஈடுபடுகிறார்கள் என்கிற செய்தி தெரிந்த காரணத்தினால்தான் அந்த அறிவிப்பைப் புரட்சித்தலைவர் வெளியிட்டார். புரட்சித் தலைவருடைய தமையனார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அவர் இருக்கிறபோது மாத்திரம் தவறுகள் செய்யவில்லை; அவர் இறந்ததற்குப் பிறகும் தொடர்ந்து தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்

ஒருமுறை, புரட்சித் தலைவர் சொத்து முழுவதையும் கட்சிக்கு எழுதிவைத்துவிட்டால் எனக்குப் பிறகு எனது மனைவி ஜானகி அம்மையார் ஒவ்வொரு தொண்டர் வீட்டிலேயும் போய் இருந்து அந்தத் தொண்டர்களால் காப்பாற்றப்படுவார் என்று அறிவித்திருக்கிறார் அப்படி அவர் அறிவித்த ஒன்றே, புரட்சித் தலைவருக்குப் பிறகு அந்தத் தொண்டர்கள் யாரை ஆதரிக்கவேண்டும் என்பதை லட்சோபலட்சம் கழகத் தொண்டர்களுக்கு அவர் அடையாளம் காட்டிவிட்டுப் போயிருக்கிறார் என்பதற்குத் தக்க சான்றாகும்.

நாற்பது ஆண்டு காலம் புரட்சித தலைவரின் வாழ்வோடு தன்னை இரண்டற இணைத்துக்கொண்டு இணையாகவும் துணையாகவும் இருந்து உயிராகவும் உடலாகவும் விளங்கி, ஒளியாகவும், விழியாகவும் வாழ்ந்த, அன்னை ஜானகி அம்மையாரும், அவர் அணியிலிருக்கிற நாங்களும் சத்தியத்தின் உருவங்களா? அல்லது; எப்போது புரட்சித் தலைவர் கண்ணை மூடுவார். அவரால் போடப்பட்ட தடைகளும் களைகளும் நிர்ப்பந்தங்களும் நீங்கும், சொந்த ஆசைகளை சூழ்ச்சி செய்து நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று துடித்துக்கொண்டிருந்தது இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய ஆட்சியை வீழ்த்திவிட்டோம் என்று எக்காளமிடுகிறதே அந்தத் துரோகக் கூட்டம்; அது சத்தியத்தின் உருவங்களா? என்பதை வருகின்ற தேர்தல் நிரூபிக்கப்போகிறது

## வீதித் தடை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியிலிருந்து கொடிகாமம் செல்லும் வீதியில் அரசடி வரைக்கும் வடபிராந்தியபோக்குவரத்துச் சேவை பஸ்ஸைத் தவிர வேறு வாகனங்கள் செல்வதற்கு தற்காலிகமாக அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

# அனுமதிப்பத்திரம் பெறுவதில் கஷ்டம்


(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் வாகன அனுமதிப்பத்திரம் பெறுவவற்காக தினமும் ஆயிரத்தற்கு மதிகமானவர்கள் 'கியூ' தில் காத்திருக்கிறார்கள்.

காலை ஏழு மணியிருந்து வரிசையில் நிற்கும் பலர் பல சந்தர்ப்பங்களில்தமது வாகன அனுமதிப்பத்திரம் பெறாமலே திரும்ப வேண்டிய நிலையிலிருக்கின்றனர்.

குறிக்கப் பட்டளவு தொகையினருக்கு இந்த அனுமதிபத்திரம் வழங்கப்படுவதால் பல நாட்கள் அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக அலைய வேண்டியுள்ளதாம். (ஓ)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



சிறப்பக்கலைஞர்
முருகேசு
நாகலிங்கம்
(ஆச்சாரி)

மலர்வு:- 27- 02- 1900
உதிர்வு:- 26- 01- 1988

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய், குன்றின் மேலிட்ட தீபமாய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

"லிங்கபவனம்",
மயிலிட்டி வடக்கு,
மயிலிட்டி.

[சி-2536]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



து. சுப்பிரமணியம்
செல்வராஜா (ராஜா)

அன்னை மடியில்:
17-9-1960
ஆண்டவன் அணைப்பில்:
28-2-1985
திதி: 25-2-1988

அழுதே புலம்புகின்றோம்
உம் ஆத்ம சாந்திக்காய்
உம்பிரிவை எண்ணயிலே
இதயத்து ஒலி கூட ஒலிக்
காமல் நிற்குதையா
இருபத்தைந்து ஆண்டுகள்
இருந்தது போதுமென்றே
எம்மையெல்லாம் இடை
நடுவில்
விட்டு நீர் சென்றதுவோ
தொப்பில் அறுகையிலே
தொடர்பும் அறுந்திருந்
தால்
சற்றேகணப் பொழுதில்
உமை நாம் மறந்திருப்
போம்,
ஐந்து பேருள்ளே
இளையவனாய்
வந்தஉம்மை மூத்தோனாய்
எண்ணி
எமையெல்லாம் இனிதே
கரைசேர்த்து
வைப்பீர் என்று எண்ணி
இருக்கையிலே
எம்மையெல்லாம்
விட்டண்ணா
எப்படித்தான்பிரிந்தீரோ
உம்பிரிவால் இதய
மெல்லாம்
ஆறுதுயரத்தால்
அழுதே புலம்புகின்றோம்
உம் ஆத்ம சாந்திக்காய்!

உம்பிரிவால் வாடும்

ஐயா, அம்மா, அண்ணமார், அக்காமார், தங்கை, மச்சான்மார், மைத்துனிமார், மருமக்கள், பெருமக்கள், நண்பர்கள்.

'துககாபுரி',
கொக்குவில். [சி 2537]

# அந்தியேட்டியும் நன்றி நவிலலும்



அமரர்
சி. பரராஜசிங்கம்
பதியின் படைப்பு:
15-2-1930
விதியின் அழைப்பு:
26-2-1988

மட்டுவிலைச் சேர்ந்தவரும், கொக்குவிலில் வசித்தவரும், இளைப்பாறிய இ. போ. ச. ஊழியருமான சி பரராஜசிங்கம் 26-1-88-ல் அமரரானார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

26-2 88-ல் கொக்குவிலில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிற் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு: சூழ்நிலை காரணமாகத் தனிப்பட்ட மரணச்செய்தி அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம் தகனக்கிரியையிற் கலந்து உதவி புரிந்தவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி: திருமதி பரராஜசிங்கம்.
மகன்: பிரப ஜீ.
'அகிப்ஸகிரி',
ஸ்ரேஸன் றோட்,
கொக்குவில்.

வெளிநாட்டிலிருந்து நன்றி நவில்பவர்கள்:
மகள்: உமாராணி.
மருமகன்: சிவா
பேரன்கள்: பிந்துஜன், சிந்துஜன் (சுவீஸ்)
மகன்: இராஜ ஜீ (ஜேர்மனி)
மகள்: உமாபவானி,
மருமகன்: சுகுமார் (ஜேர்மனி)
மகன்: நேதாஜீ (சுவீஸ்).
பெருமகன்: பாலாஜீ (டென்மார்க்)

(ஏ 2533)

# "இலங்கைத் தமிழர்கள் ஜனநாயக ரீதியில் அபிப்பிராயங்களை வெளியிட மாகாண சபைத் தேர்தல்"

## — கே. நட்வர்சிங்

(சென்னை)

'இலங்கையிலுள்ள தமிழர்கள் ஜனநாயக ரீதியில் தமது அபிப்பிராயங்களை வெளியிடுவதற்காக அங்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மாகாண சபைகளை அமைப்பதற்கும் அதற்கு அதிகாரங்களை வழங்குவதற்கும் இலங்கை அரசு சட்டம் இயற்றியுள்ளது.'

இவ்வாறு இந்திய மக்கள் சபையில் கேள்வியொன்றுக்குப் பதிலளித்துப் பேசிய இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் கே நட்வர்சிங் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் மேலும் கூறியதாவது:

'இந்திய-இலங்கை உடன்பாட்டை அங்கீகரித்து, ஆயுதங்களை ஒப்படைக்கும் தீவிரவாதிகளுக்கு மன்னிப்பு அளிப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. அந்த அரசு மூவாயிரத்துச்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளது ஊர்காவற்படையினரிடமிருந்து ஆயுதங்கள் மீளப் பெறப்பட்டுள்ளன.

'இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பிபதும் அவர்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.'

'இலங்கையின் வடக்குக், கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் அனைத்து சமூக மக்களும் பாதுகாப்பாக வாழ்வதற்கு, இலங்கை அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அங்கு அமைதிப்படையினர் உள்ளனர். இந்த நல்லெண்ணத்தை கருத்திற் கொண்டு அங்கு அமைதிப்படை எவ்வளவு காலம் இருக்க வேண்டுமென்பதைப் பார்க்க வேண்டும்.'

# தே. எண்ணெய் விலை சரிந்தது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் தேங்காய் எண்ணெயின் விலை திடீரென லீற்றர் 11 ரூபாவால் குறைந்துள்ளது.

லீற்றர் 42 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் தற்போது 33 ரூபாவாக விற்பனை செல்யப்பட்டு வருகிறது.

# 'காலரா'வுக்குப் பெண் பலி எண்மர் ஆஸ்பத்திரியில்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் வெகுவாகப் பரவிவரும் 'காலரா' நோய்க்கு பெண் ஒருவர் நேற்று பலியானுர். மேலும் எட்டுப் பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் சங்குவேலியை சேர்ந்த கந்தையா நாகம்மா (வயது 58) என்ற பெண்ணே நேற்று இந்நோய்க்குப் பலியானவராவார்.

மேலும் இவரது வீட்டில் இதே நோயினுல் பாதிக்கப்பட்ட இரு குழந்தைகள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை சுழிபுரம்,உரும்பராய் பகுதியிலிருந்து தலா ஒருவரும், கொழும்புத்துறையிலிருந்து நால்வரும் இந் நோயினுல் பாதிக்கப்பட்டு நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்ந்து இதுவரை யாழ்ப்பாணத்தில் மூவர் மரணமடைந்துள்ளதுடன் முப்பத்தாறு பேர்வரையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு)

# மரண அறிவித்தல்

### திரு. தம்பியப்பா நடராசா

கரம்பன் தம்பியப்பா நடராசா காலமானுர். அன்னுர் நதீஸ்றேட் சென்றர் யாழ்ப்பாணம் மனேச்சரும், நாரந்தனை காலஞ்சென்ற மீரிகம முத்தையா, பூமணியின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக்கணவரும், இளங்குமரன் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம், தமையந்தி சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி, கரம்பன் ஆகியோரின் அருமைத் தகப்பனுரும், தியாகராசா, சிங்கராசா நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வைத்தியநாதன், தர்மநாதன், யோகநாதன் ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவர். அன்னுரின் ஈமைக்கிரியைகள் 25-02-88 வியாழக்கிழமை [இன்று] பிற்பகல் 2-30 மணியளவில் அன்னுரின் நாரந்தனை இல்லத்தில் நடைபெற்று தம்பாட்டி மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

சி-2528 தகவல்: யோகேஸ்வரி நடராசா.

### தாமோதரம்பிள்ளை சண்முகசுந்தரம்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டைச் சேர்ந்தவரும், இலங்கை பத்திரிகைப் பேரவை ஒய்வுபெற்ற கணக்காளருமாகிய தா. சண்முகசுந்தரம் காலமாகிவிட்டார். இவர் ராஜலட்சுமியின் அன்புக் கணவரும், பார்த்திபன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம், வஸந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராணி, கௌரி, பவானி, குகநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரிகைகள் இன்று [25-2-88] நண்பகல் 12 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்ருர், உறவினர் நண்பர்கள் தயவுசெய்து இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- து. மகாதேவன், நாயன்மார்கட்டு.

[சி-2551]

### திருமதி அரியரத்தினம் செல்வபூமணி (உடுப்பிட்டி)

திருமதி அரியரத்தினம் செல்வபூமணி (23-2-88 அன்று) காலமாகிவிட்டார் இவர் இளைப்பாறிய அதிபர் S. R. அரியரத்தினத்தின் அன்புமனைவியும், மகேந்திரா, ஜெயேந்திரராசாவின் அன்புத்தாயாரும், மகேந்திரா மனோன்மணியின் அருமைமாமியும், செல்வரூபன், செல்வறஜனி, செல்வகரன் செல்வரதியின் பேத்தியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் [25-2-88 வியாழக்கிழமை உடுப்பிட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்ருேம்.

தகவல்: S. R. அரியரத்தினம்,
இளைப்பாறிய அதிபர்,
உடுப்பிட்டி.

(சி 2525)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1988-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81. Eelanadu P.O. Box; No:49. Telegram, Eelanadu, Telephone: 22389, 24126.

## ராஜினுமா

[1ம் பக்கத்தொடர்ச்சி]

சபையிலிருந்த உறுப்பினர்களிடையே இடம்பெற்றவாக்குவாதம் ஒன்றையடுத்து தமது பதவியை ராஜினுமாச்செய்யப் போவதாக திரு. சர்மா தெரிவித்தார்.

ராஜ்யசாபா கூட்டத்தின் போது ஆந்திரப்பிரதேஷ் மாநில ஆளுனரின் செலவினங்கள் தொடர்பாக எதிர்கட்சி உறுப்பினர் ஒருவர் கேள்வியொன்றை எழுப்பினுர்.

ஆளும்கட்சி உறுப்பினர்கள் இக்கேள்வியை சபையில்கேட்க அனுமதிக்கக்கூடாது என்று உபஜனுதிபதியிடம் தெரிவித்தனர் ஆனுல்உபஜனுதிபதி அக்கேள்வியை அனுமதிக்கவே சபையில்பலத்த வாக்குவாதம் ஆரம்பமானது.

பிரதமமந்திரி திரு. ராஜீவ் காந்தியும் அச்சமயப் சபையில் இருந்தார். ஆனுல்அவர் தமது ஆளுங்கட்சி உறுப்பினர்களை அமைதிப்படுத்த முற்படவில்லை என்றும் சபையை விட்டுச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே உபஜனுதிபதி சங்கர் தயாள் சர்மா தமது பதவியை ராஜினுமாச்செய்யப் போவதாகத் தெரிவித்ததுடன் சபையிலிருந்தும் வெளியேறினுர். பின்னர் சற்றுநேரத்தில் அவர் மீண்டும் சபைக்குவந்தார். இதனையடுத்து நிதி அமைச்சர் என் டி திவாரி, ஆளும்கட்சி உறுப்பினர்கள் சபையில்நடந்து கொண்ட முறைகுறித்து கவலை தெரிவித்ததுடன், அதற்காக உபஜனுதிபிடம் மன்னிப்புக் கோரினுர். பின்னர்சபை நடவடிக்கைகள் தொடர்ந்தன.

ஆந்திரப்பிரதேஷ் மாநில ஆளுனர் ஒருமுன்னுள் இந்திராகாங்கிரஷ் அமைச்சரவை உறுப்பினர் என்றும் இககட்சியின் உறுப்பினர்களில் ஒருவராகவும் இருக்கிருர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[கி]

## ஜி. ஸி. ஈ. (டிச. 87) பரீட்சை:

# அமைச்சர்தான் 'இறுதி முடிவெடுக்கவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த ஜி. ஸி ஈ. (சாதாரணதர) பரீட்சையை மீண்டும் நடத்துவது, ஒரு மேலதிக வேலையாகும். அது மட்டுமல்ல இப்பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கு பணமில்லை'' என்று பரீட்சைத்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு தயார்செய்யும் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவரின் பெற்ருேர் கடந்த வாரம் கொழும்பு சென்று பரீட்சைத்திணைக்கள அதிகாரி ஒருவரைச்சந்தித்து மேற்படி பரீட்சை நடத்துவது பற்றி கருத்துப் பரிமாறியபோதே அவ்வதிகாரி இவ்வாறு கூறினுராம்.

இப்பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கு பண ஒதுக்கீடு இல்லையென்றும் இட பரீட்சை சம்பந்தமாக முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு கல்வி அமைச்சரிடமுள்ளதால் பாதிக்கப்பட்ட மாணவர்களும், அவர்களின் பெற்ருேர்களும் கல்வி அமைச்சரிடம் தொடர்பு கொண்டு பரீட்சை நடைபெற முயற்சிக்குமாறு மேற்படி அதிகாரி யோசனை கூறியுள்ளார். (ஒ)

## தமிழக தேர்தல்

[சென்னை]

தமிழக சட்டசபைத் தேர்தல்கள் இவ்வாண்டு செப்டம்பர் மாதத்திற்கு முன்னர் நடைபெறுமென்று தமிழக புதிய ஆளுநர் திரு. பி. ஸி. அலெக்ஸாண்டர் தெரிவித்துள்ளார்.

இதற்காக வாக்காளர் பட்டியல் முற்றிலும் திருத்தியமைக்கப்படும் என்றும் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும்நடைபெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [சி]

# இந்தப்பொருள்கள் உங்களுடையதா?

[யாழ்ப்பாணம்]

தட்டச்சுக்கருவி, மோட்டர் ரேப்றெக்கோடர், டெக், உட்பட ஐம்பதினுயிரம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்கள்இந்திய அமைதிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

குருநகர் பகுதியில்நேற்று முன்தினம் அமைதிப்படையினரால் கைப்பற்றப்பட்ட இவ்பொருள்கள் ஸ்ரான்லி வீதி கஸ்தூரியார் வீதிச்சந்தி பெற்ருேல் நிரப்பு நிலையத்திலுள்ள அமைதிப்படை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இப்பொருள்களின் உரிமையாளர்கள் லைசென்ஸ், பற்றுச்சீட்டுமற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகளுடன் நேரில் தம்முடன் தொடர்புகொள்ளுமாறுமேற்படி பெற்ருேல் நிரப்புநிலையத்திலுள்ள அமைதிப்படைஅதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இத்தகையதிருட்டுப் பொருள்களை தேடும்பணியில் அமைதிப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுவருவதாகவும் கடந்த காலங்களில் பல திருட்டுப் பொருள்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [ஒ]

## மருத்துவபீட மாணவர்களின் பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் அவசர பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல்மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல முக்கியவிடையங்கள் ஆராயப்பட இருப்பதால் சகல மானவர்களையும் தவருது சமூகம் அளிக்கும்படி மருத்துவ மாணவ குழுக்களின் பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சமூகசேவைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம்புக்கன தொகுதியில் ஐ.தே க. சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ருர். பின்னர் இவர் சமூகசேவைகள் அமைச்சராக நியமிக்கப்பட்டார். [கி]

## அதிகார

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஙைகளை நடத்தியபின்கே அதிகாரப் பரவலாக்கங்களை மேலும் விரிவுபடுத்தமுடியும் என்று ஜனுதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன தெரிவித்திருக்கிருர்.

## காத்தாண்குடியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வர் கொல்லப்பட்டதுடன் அமைதிப் படையைச் சேர்ந்த ஒருவரும், மற்ருெருவரும் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைதிப்படையினர் மீது மறைந்திருந்து கைக்குண்டு வீசப்பட்டதையடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## புதிய அமைச்சு

[கொழும்பு]

புதிய மாகாண சபைகள் அமைச்சு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேற்படி தகவலை பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறிய ஜனுதிபதி ஜெயவர்த்தன இந்தப் புதிய அமைச்சு மாகாண சபைகள் தொடர்புடைய அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பாகவிருக்கும் என்ருர்.

## மீண்டும் உதவிப்பணம்

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மூலமாக வழங்கப்பட்டு வந்த பொதுசன மாதாந்த உதவிப்ணபமும், கயரோக நிவாரண உதவிப்பணமும் மீண்டும் வழங்கப்படவுள்ளன.

யாழ். சமூக சேவைத்திணைக்களம் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனுகவே இப் பணத்தை இவர்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

யாழ். செயலகத்திலுள்ள அத்தியாவசிய சேவைகளில் ஒன்ருன சமூக சேவைத்திணைக்களம் இயங்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து இதற்கான கொடுப்பனவுகள் காசோலைகள் மூலம் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது